# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

*Mobile: 0449 892 066*

*Email :* mtdruitttsc@gmail.com *Web :* www.mtsc.org.au


பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# பேச்சுப் போட்டி 2021

## ஆண்டு 5

நடுவர்களுக்கும், சபையோருக்கும் எனது அன்பான வணக்கம்!




## என்னைக் கவர்ந்த நூல்

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”

தமிழ் நூல்களில் என்னைக் கவர்ந்தது இந்த ஈரடியுடன் தொடங்கும் நூலான திருவள்ளுவரின் “திருக்குறள்”.

திருக்குறளானது தமிழர்களின் பண்பாட்டை உலகிற்கு கூறும் “தமிழ்மறை”. இன மத மொழி வேறுபாடுகளின்றி பலராலும் போற்றப்படும் “உலகப் பொதுமறை”. எக்கால வாழ்விற்கும் பொருந்தும் “பொய்யாமொழி”. பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட “தமிழ் இலக்கியம்” . இத்தனை பெருமைகளுடையது இந்நூல்!

திருக்குறளில் மொத்தம் ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறட்பாக்கள். இவற்றில் எண்பது குறட்பாக்கள் கல்வியறிவு தொடர்பான சிந்தனையை ஊட்டுபவை.

இப்போது, எனக்குப் பிடித்த குறளொன்றினை உங்களுடன் பகிர விரும்புகின்றேன்.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு”

கிணற்றில் தோண்டிய அளவிற்கே நீர் வரும். அதேபோல், நாம் கற்ற அளவிற்கே அறிவு பெருகும் என்பதே இதன் பொருள்.

இறுதியாக, திருக்குறள் உங்களையும் கவரும் என்பதில் ஐயமில்லை எனக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி சாந்தினி ஜெயதேவன்

பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.